*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **08 டிசம்பர் 2025**

## பத்திரிகை செய்தி

முப்படை வீரர்கள் கொடி நாள் விழா லோக் பவனில் இன்று(08.12.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன், கடந்த ஆண்டு கொடி நாள் நிதிக்கு அதிக பங்களிப்பு செய்த அரசு துறைகள், நிறுவனங்கள், தனி நபர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, தலைமைச் செயலர் திரு சரத் சவுகான், முன்னாள் படை வீரர்கள்துறைச் செயலர் திரு கேசவன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய துணைநிலை ஆளுநர், முப்படை வீரர்களின் தியாகம் போற்றுதலுக்கு உரியது. நாட்டிற்காக உயிர் தியாகம் செய்யும் படை வீரர்களின் இறுதிச்சடங்கு வரும் காலங்களில் அரசு மரியாதையுடன் நடைபெற வேண்டும். என்று தெரிவித்தார்.